11 JUL 2006
Eastern University, Sri Lanka

# EASTERN UNIVERSITY, SRILANKA

## FACULTY OF ARTS AND CULTURE

## GENERAL DEGREE PART I EXAMINATION IN ARTS &CULTURE 2004.

## (EXTERNAL DEGREE)

**ECO 201 MICRO ECONOMICS**

ஏதாவது 5 வினாக்களுக்கு விடை தருக — நேரம் : 3 மணி

1. (அ) சமநோக்கு கோடுகள் என்பதிலிருந்து நீர் என்ன விளங்கிக் கொள்கிறீர் என்பதையும் அவற்றின் இயல்புகளையும் சுருக்கமாக விளக்குக.

(08புள்ளிகள்)

(ஆ) பதிலீட்டு விளைவு மற்றும் வருமான விளைவு என்பவற்றை வேறுபடுத்திக் காட்டும் ஹிக்ஸ் மாதிரியை வரைபடத்தின் உதவியுடன் விளக்குவதுடன் அது சுலட்ஸ்கி மாதிரியில் இருந்து எவ்விதம் வேறுபடுகின்றது என்பதையும் விளக்குக.

(12 புள்ளிகள்)

2. (அ) குறுங்கால நீண்டகால உற்பத்தித் தொழிற்பாடுகளை விளக்குக.

(04 புள்ளிகள்)

(ஆ) மொத்த உற்பத்தி, எல்லை உற்பத்தி, சராசரி உற்பத்தி என்பவற்றை வேறுபடுத்துக.

(04 புள்ளிகள்)

(இ) " குறுங்காலத்தில் மாறும் காரணிக்கான எல்லை உற்பத்தியில் ஒரு வீழ்ச்சி ஏற்படும் போது, குறைந்து செல்லும் விளைவுகள் இடம்பெறுகின்றன" வரைபடங்களின் உதவியுடன் விளக்குக.

(12 புள்ளிகள்)

3. (அ) நிலையான செலவுகளையும், மாறும் செலவுகளையும் உதாரணங்கள் காட்டி வேறுபடுத்துக.

(04 புள்ளிகள்)

(ஆ) நீண்ட காலத்தில் சராசரி மொத்தச் செலவுக் கோட்டின் (ATC) வடிவத்தைத் தீர்மானிக்கும் காரணிகளை விளக்குக.

(08 புள்ளிகள்)

(இ) "மிகை இயலளவு" "ஒதுக்கு இயலளவு" இரண்டையுயம் வேறுபடுத்திக் காட்டுக.

(08 புள்ளிகள்)

4. (அ) நிறைபோட்டிச் சந்தை அமைப்பு ஒன்றின் அம்சங்களை விபரிக்குக.

(06 புள்ளிகள்)

(ஆ) நிறைபோட்டிச் சந்தையமைப்பு தனியுரிமைப் போட்டிச் சந்தையில் இருந்து எவ்வாறு வேறுபடுகின்றது?

(04 புள்ளிகள்)

(இ) மேற்படி சந்தை அமைப்பில் இலாப உச்சப்படுத்தலானது குறுங்காலத்திலும் நீண்ட காலத்திலும் எவ்வாறு வேறுபட்டு அமைகிறது என்பதை விளக்குக.

(10 புள்ளிகள்)

5. (அ) ஒரு தொழிலானது எவ்வாறு ஒரு தனியுரிமை அமைப்பாக மாறுகிறது என்பதை விளக்குக.

(04 புள்ளிகள்)

(ஆ) தனியுரிமை அமைப்பு ஒன்றின் சமநிலை நிலமையை வரைபடங்களின் உதவியுடன் விளக்குக.

(08 புள்ளிகள்)

(இ) "விலை வேறுபடுத்தல்" எனும் பதத்தினை விளக்கி அதற்கு அவசியமான நிபந்தனைகளையும் விளக்குக.

(08 புள்ளிகள்)

6. (அ) தனியுரிமை போட்டிச் சந்தை அமைப்பில் விளம்பரத்தின் முக்கியத்துவத்தை விளக்குக.

(04 புள்ளிகள்)

(ஆ) மேற்படிச் சந்தை அமைப்பில் காணப்படும் "பொருள் வேறுபடுத்தல்" என்பதனை விளக்குக.

(04 புள்ளிகள்)

(இ) தனியுரிமைப் போட்டி அமைப்பின் குறுங்கால சமநிலையை வரிப்படங்களைப் பயன்படுத்தி விளக்குக.

(12 புள்ளிகள்)

7. (அ) சிலருரிமை அமைப்பின் பிரதான இயல்புகளை ஆராய்க.

(08 புள்ளிகள்)

(ஆ) முறிந்த கேள்விக் கோடானது எவ்வாறு ஒரு சிலருரிமை நிறுவனத்தின் தந்திரோபாய நடத்தையை விபரிக்கிறது?

(12 புள்ளிகள்)

8. பின்வருவனவற்றுள் ஏதாவது மூன்றினைச் சுருக்கமாக விளக்குக.

(அ) சம உற்பத்திக் கோடுகள்

(ஆ) அளவுத்திட்ட விளைவுகள்

(இ) நுகர்வோன் மிகை

(ஈ) எண்ணளவுப் பயன்பாட்டு அணுகு முறை

(20 புள்ளிகள்)